ஆசீர்வதிப்பார் இயேசு ஆசீர்வதிப்பார்
பெருகப்பண்ணுவார் உன்னை
பெருகப்பண்ணுவார் -2

இந்த வானமும்
பூமியும் படைத்தவர்
வாக்குத்தத்தம் செய்தவர் -2

ஆவியின் கனிகள் தந்திடுவார்
வல்லமை வரங்கள் கொடுத்திடுவார் -2
அபிஷேகம் உன்னில் பெருகச் செய்வார்
அற்புதம் தினமும் செய்திடுவார் -2

குடும்பத்தில் இன்பம் தந்திடுவார்
குறைவுகள் எல்லாம் நீக்கிடுவார் -2
உந்தன் சந்ததி பெருகச் செய்வார்
அதிசயம் தினமும் கானச் செய்வார் -2

செயள்களில் ஆசீர் தந்திடுவார்
காரியம் எல்லாம் வாய்க்கச் செய்வார் -2
உந்தன் சம்பத்து பெருகச் செய்வார்
வேலி அடைத்து காத்திடுவார் -2